**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| **வழக்கு எண்** | OS | 27 | of | 2010 |

**2025-ம் ஆண்டு ஜுலை திங்கள் 16-ம் நாளான இன்று**

| | |
|---|---|
| **வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்** | **தரப்பில் வா.சா. 1 -வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.** |

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **தாமோதரன்** | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்-16.07.2025**

**வா.சா.-1**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

2002 ம் ஆண்டு என் தகப்பனார் அவருக்கு சொந்தமான அசையும் மற்றும் அசையா சொத்துக்களை பிரித்துக் கொடுத்துவிட்டார். 2003 ம் ஆண்டு என் தகப்பனாருக்கு 90 வயதாகும் போது பாலவாக்கம் சொத்து மற்றும் வழக்கு சொத்து ஆகியவை அவர் பெயரில் வாங்கப்பட்டது. என் தகப்பனாருக்கு அப்போது கிரயம் வாங்க பொருளாதார வசதி இல்லை என்றால் சரியல்ல. என் தகப்பனாரிடம் வாடகை மூலம் கிடைத்த வருமானம் இருந்தது. ஒயின் ஷாபில் இருந்து அவருக்கு மாதந்தோறும்

அவருக்கு வாடகை கிடைத்து வந்தது. ஒயின் ஷாப் எண். 3 என்.பி ரோடு, திருவான்மியூர், சென்னை என்ற விலாசத்தில் நடந்து வந்தது. மாதந்தோறும் என் தகப்பனார் பெற்று வந்த வாடகை தொகை எவ்வளவு என்று குறிப்பாக தெரியவில்லை. ஒயின்ஷாப் நடத்த என் தகப்பனார் பெயரில் உரிமம் இருந்ததா என்று தெரியவில்லை. என் தகப்பனாருக்கு ஒயின்ஷாப் வாடகை பணம் எதுவும் கிடைக்கவில்லை என்றால் சரியல்ல. ஒயின்ஷாப் நடத்தப்பட்ட மனை என் தகப்பனாருக்கு சொந்தமானதாகும். 2003ம் ஆண்டு அந்த மனை விற்கப்பட்டது. 2003ம் ஆண்டு விற்பனை செய்யும் வரை வருமானம் என் தகப்பனாருக்கு கிடைத்து வந்தது. அதன் பிறகு அவருக்கு எந்த வருமானமும் இல்லை. வழக்கு சொத்து ரூ.5 லட்சம் தொகைக்கு வாங்கப்பட்டது. பாலவாக்கம் சொத்து எவ்வளவு தொகைக்கு வாங்கப்பட்டது என்று தெரியவில்லை. இந்த 2 சொத்துக்களையும் கிரயம் பெற என் தகப்பனாருக்கு 2003ம் ஆண்டுவாக்கில் வருமானம் எதுவும் இருக்கவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனார் திருவான்மியூர் சொத்தை விற்றுதான் மேற்படி 2 சொத்துக்களை வாங்கினார். திருவான்மியூர் சொத்தை விற்று கிடைத்த பணத்தை என் தகப்பனார் எங்களுக்கு பங்கு போட்டு கொடுத்துவிட்டார் என்பது சரிதான். வருமான வரி தாக்கல் செய்யும் சூழ்நிலை ஏற்பட்டதால் ஆண் பிள்ளைகள் அனைவரிடமும் கொடுத்த பணத்தை மீண்டும் பெற்றுக் கொண்டு என் தகப்பனார் மேற்கண்ட 2 சொத்துக்களை கிரயம் பெற்றார். இந்த

சங்கதிகளை வழக்குரையிலும் வழக்கிற்கு பின்னிட்டு கொடுக்கப்பட்ட அறிவிப்புகளிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.18 அறிவிப்பில் 1ம் பிரதிவாதி அவருடைய பணத்தை கொண்டு தகப்பனார் பெயரில் கிரயம் பெற்றதாக சொல்லியுள்ளார்என்றால் அதுபற்றி தெரியவில்லை. வா.சா.ஆ.18 பதில் அறிவிப்பை நான் படித்து பார்க்கவில்லை. வழக்குரையில் என் தகப்பனார்அவர் சொந்த பணத்தை கொண்டு சொத்துக்களை கிரயம் பெற்றதாகதான் சொல்லியிருக்கிறேன். வழக்குரையை நான் படித்துப் பார்த்துதான் தாக்கல் செய்தேன். 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த அ.வ. எண் 27/2010 ல் நான் எதிர் வழக்குரை தாக்கல் செய்தேன். அதில் பாரா 23 ல் என் தகப்பனாருக்கு தாவா சொத்தை கிரயம் பெற ரூ.5 லட்சம் அனுப்பினேன் என்று முதல் முறையாக சொல்லியிருக்கிறேன். அதற்கான ஆதாரம் தாக்கல் செய்யவில்லை . வழக்கு சொத்தை பொறுத்தவரை 1ம் பிரதிவாதிதான் முழு செலவையும் செய்தார் என்றால் ச ரியல்ல. பாலவாக்கம் சொத்தை மோகனரங்கம் என் தகப்பனாருக்கு தொகை கொடுத்து அவர் பெயரில் கிரயம் பெறப்பட்டது. அந்த மோகனரங்கத்திற்கு என் தகப்பனார் உயில் எழுதி வைத்தார் என்றால் உண்மை. தாவா சொத்தை 1ம் பிரதிவாதிக்கும் அந்த சொத்து சார்ந்த இன்னொரு பாகத்தை ரமேஷ்க்கும் என் தகப்பனார் உயில் எழுதி வைத்தார். இந்த ஏற்பாடு அனைவருக்கும் ஏற்புடையதாக இருந்ததால் அமைதியாக இருந்தோம். எனக்கு தனிப்பட்ட வருமானம் எதுவும் இல்லை.

நான் வேலைக்கு செல்லவதில்லை. என்  தம்பி ரமேஷ் சொத்தில் அனுமதிபேரில் குடியிருந்து வந்தேன். தற்போது ஈஞ்சம்பாக்கத்தில் என் தங்கை வீட்டில் குடியிருந்து வருகிறேன்.  தாவா சொத்தில் 2003 ஆண்டில் கட்டிடம் எழுப்பபட்டது. அவ்வாறு எழுப்பட்ட கட்டிட செலவுகளை செய்வதற்கு என் தகப்பனாருக்கு வருமானம் இருக்கவில்லை என்றால் சரியல்ல. கட்டிட செலவு சுமார் 10 லட்சம் இருக்கும். நான் கட்டிட வேலையில் தலையிடவில்லை.

வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu
Date: 2025.07.17 10:02:44 +0530